# கணக்கீடு – 33 தரம் - 13

## Covid – 19 இடர் விடுமுறைகால பயிற்சி

## தேர்ச்சி 13 – நிதி விகிதங்கள்

**Week : July 12 - 16** **தயாரிப்பு : சஜித்.sp**
**இரத்தினபுரி தமிழ் தேசிய கல்லூரி** **BBA(Financial Spl), University of Colombo**

**1.** சியானி PLC யின் 31.03.2021 இல் முடிந்த ஆண்டுக்கு எடுக்கப்பட்ட தகவல்கள் வருமாறு:

**ரூ. "000"**

| | | |
|---|---|---|
| விறபனை வருமானம் | | 240 |
| விற்பனைக் கிரயம் | | (160) |
| மொத்த இலாபம் | | 80 |
| விநியோக செலவுகள் | 15 | |
| நிர்வாகச் செலவுகள் | 7.5 | |
| நிதிச் செலவு (வட்டி) | 5 | (27.5) |
| வரிக்கு முன்னரான இலாபம் | | 52.5 |
| வருமானவரி | | (2.5) |
| ஆண்டுக்கான இலாபம் | | 50 |

**மேலதிக தகவல்கள் :**

1. 31.03.2021 இல் கூறப்பட்ட சாதாரணபங்கு மூலதனம் ரூ. 200 000 பங்கொன்றின் பிரதி பயன் ரூ. 20 ஆகும்.
2. 31.03.2021 இல் நடைமுறைப் பொறுப்புக்கள் ரூ. 40 000
3. கடன்மூலதனம் ரூ. 120 000 ஆகும்.
4. 31.03.2021 இல் நிறுத்தி வைத்த வருவாய் ரூ. 40 000

**வேண்டப்படுவது :**

**01.** மொத்த இலாப வீதம்
**02.** வட்டிக் காப்பு விகிதம்
**03.** மொத்த சொத்து மீதான திரும்பல்
**04.** உரிமை மீதான திரும்பல்
**05.** உரிமையாண்மைக்கு கடன்
**06.** கடன் விகிதம்
**07.** பங்கொன்றுக்கான உழைப்பு
**08.** பங்கொன்றுக்கான இலாபம்

**2.** வரையறுத்த **ரகுமான்** பொதுக்கம்பனியினதும் வரையறுத்த **ராஜா** பொதுக்கம்பனியினதும் 31.03.2022 இல் முடிவடைந்த ஆண்டுக்கான **இலாபம் அல்லது நட்டம் மற்றும் ஏனைய முற்றும் அடங்கிய வருமானக்கூற்றுக்களின்** சுருக்கங்கள் கீழே தரப்பட்டுள்ளது.

| | ரகுமான் பொதுக்கம்பனி ரூபா "000" | ராஜா பொதுக்கம்பனி ரூபா "000" |
|---|---|---|
| விற்பனைகள் | 12 000 | 15 000 |
| விற்பனைக்கிரயம் | (8 000) | (9 000) |
| மொத்த இலாபம் | 4 000 | 6 000 |
| செலவுகள் | (2 200) | (4 200) |
| வரிக்கு முந்திய இலாபம் | 1 800 | 1 800 |
| வருமானவரி | (600) | (600) |
| நிதியாண்டுக்கான இலாபம் | 1 200 | 1 200 |

Sajith.SP

| | | |
|---|---|---|
| <u>**ஏனைய முற்றும் அடங்கிய வருமானம்**</u> | | |
| காணி மீள்மதிப்பீட்டு மிகை | 300 | |
| கட்டிட மீள்மதிப்பீட்டு மிகை | | 200 |
| **மொத்த முற்றும் அடங்கிய வருமானம்** | **1 500** | **1 600** |

31.03.2022 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பின்வரும் தகவல்களும் கிடைக்கப் பெற்றன.

| | **ரகுமான் பொதுக்கம்பனி ரூபா "000"** | **ராஜா பொதுக்கம்பனி ரூபா "000"** |
|---|---|---|
| 31.03.2022 இல் உரிமையாண்மை | 6 000 | 4 800 |
| 31.03.2022 இல் நீண்டகாலக் கடன்கள் | 7 200 | 3 600 |
| சரக்கிருப்பு | 3 200 | 4 500 |
| சராசரி கடன்பட்டோர் | 4 800 | 5 000 |
| கடன்வட்டி | 600 | 400 |

**வேண்டப்படுவது :**

**(I)** **இரண்டு கம்பனிகளுக்குமான பின்வரும் நிதி விகிதங்கள்**

**01.** உரிமை மீதான திரும்பல் **02.** வட்டிக் காப்பு
**03.** உரிமையாண்மைக்கு கடன் **04.** வருமதிகள் சுழற்சி
**05.** இருப்பு புரள்வு **06.** இலாப விகிதம்

**(II)** மேலே **(I)** இல் கணிப்பிடப்பட்ட விகிதங்களின் அடிப்படையில் பின்வருவனவற்றை காரணங்களுடன் குறிப்பிப்பிடுக.

**01.** உயர்வான விரய முகாமைத்துவத்தை கொண்டுள்ள கம்பனி
**02.** உரிமையாளர்களுக்கு உயர்வான திரும்பலை வழங்கும் கம்பனி
**03.** வருமதியாளரிடமிருந்து பணத்தை வசூலிப்பதற்கு நீண்ட காலத்தை எடுக்கும் கம்பனி
**04.** சரக்கிருப்புக்களை உடனடியாக விரைவாக குறுகிய காலத்தில் விற்கும் கம்பனி
**05.** ஆகக் கூடுதலான கடன் மூலதனத்தினை கொண்டுள்ள கம்பனி
**06.** கடன்களுக்கான சன்மானத்தினை செலுத்துவதற்கு உயர்வான இயலுமையினை கொண்டுள்ள கம்பனி

Sajith.SP